**<u>பாதீட்டு குழு நிலை விவாதம் - 2025 – தேசிய கணக்காய்வு அலுவலகம்</u>**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் என்பவற்றில் வழங்கப்பட்டுள்ள முதன்மை அதிகாரத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி தேசிய கணக்காய்வு அலுவலகம் மூலம் பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றல் மற்றும் கணக்களிப்பொறுப்பை சுயாதீனமாக மதிப்பாய்வு செய்து பாராளுமன்றத்திற்கு பொதுத்துறை நிறுவனங்களின் செயலாற்றல் மற்றும் கணக்களிப்பொறுப்பு தொடர்பாக அறிக்கையிடுகிறார்.

**02. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தூரநோக்கு**

பொதுக் கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகையை நோக்கி பொதுத்துறையின் வழிகாட்டியாக இருத்தல்.

**03. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் செயற்பணி**

நிலைபேறான அபிவிருத்தியை பேணுவதற்காக சிறந்த நிதி முகாமைத்துவத்தினையும் உத்தம பொது வளப் பயன்பாட்டினையும் உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வில் ஈடுபடுவதன் மூலம் நல்லாளுகையையும் பொதுக் கணக்களிப் பொறுப்பையும் மேம்படுத்துதல்.

**04. பதவியணியினர் தகவல்**

2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| **ஊழியர் நிலை** | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்கள்** |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 553 | 477 | 76 |
| மூன்றாம் நிலை | 1467 | 682 | 785 |
| இரண்டாம் நிலை | 239 | 217 | 22 |
| ஆரம்ப நிலை | 212 | 198 | 14 |
| ஏனையவை | 0 | 0 | 0 |
| **மொத்தம்** | **2471** | **1574** | **897** |

**05. மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம்**

| | 2022 ஆம் ஆண்டின் உள்ளபடியான செலவினம் | 2023 ஆம் ஆண்டின் உள்ளபடியான செலவினம் | 2024 ஆம் ஆண்டின் உள்ளபடியான செலவினம் | 2025 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட செலவினம் |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| மீண்டெழுபவை | 2074.68 | 2224.81 | 2438.67 | 3290.30 |
| மூலதனம் | 15.05 | 35.07 | 93.00 | 132.38 |
| **மொத்த செலவினம்** | **2089.73** | **2259.88** | **2531.67** | **3422.68** |

**06. முற்பண "பீ" கணக்கு**

| | 2022 ஆம் ஆண்டின் உள்ளபடியான செலவினம ரூபா. மில்லியன் | 2023 ஆம் ஆண்டின் உள்ளபடியான செலவினம ரூபா. மில்லியன் | 2024 ஆம் ஆண்டின் உள்ளபடியான செலவினம ரூபா. மில்லியன் | 2025 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு ரூபா. மில்லியன் |
|---|---|---|---|---|
| | -------------- | --------------- | --------------- | --------------- |
| ஆகக்கூடிய செலவின எல்லை | 43.3 | 21.95 | 59.95 | 150.0 |
| ஆகக்குறைந்த பெறுவனவு எல்லை | 73.5 | 64.15 | 64.70 | 60.0 |
| ஆகக்கூடிய வரவு மீதி எல்லை | 194.0 | 149.68 | 147.64 | 239.3 |

**07. மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் (வி.அ.ஓ.நி. ஓய்வூதிய வருமானம தவிர)**

| | உள்ளபடியான வருமானம் 2022 | உள்ளபடியான வருமானம் 2023 | உள்ளபடியான வருமானம் 2024 | 2025 ஆம் ஆண்டிற்கானது மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| கணக்காய்வு கட்டணத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் | 489.00 | 415.00 | 413.60 | 300.000 |
| ஏனைய வருமானம் | 13.11 | 270.24 | 11.34 | 8.903 |
| மொத்தம் | **502.11** | **685.24** | **424.94** | **308.903** |

**08. தற்போது எமது சேவைநாடுநர் தளம்**

| வரிசை எண் | சேவைநாடுநர் | நிறுவனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அமைச்சுக்கள் | 24 |
| 2 | திணைக்களங்கள் | 110 |
| 3 | மாவட்ட செயலகங்கள் | 25 |
| 4 | பிரதேச செயலகங்கள் | 331 |
| 5 | கூட்டுத்தாபனங்கள் | 222 |
| 6 | பொதுக் கம்பனிகள் (50% அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் அரசாங்கம், ஒரு கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூராட்சி அதிகாரசபைக்கு சொந்தமான கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகள்) | 117 |
| 7 | அரச வங்கிகள் | 09 |
| 8 | நியதிச்சட்ட மற்றும் ஏனைய நிதியங்கள் | 67 |
| 9 | வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்திட்டங்கள் | 113 |
| 10 | ஏனைய சுயாதீன நிறுவனங்கள் | 11 |
| 11 | மாகாண சபைகள் | 09 |
| 12 | உள்ளூராட்சி அதிகாரசபைகள் | 341 |
| 13 | கமநல சேவை நிலையங்கள் | 565 |
| 14 | விளையாட்டு சங்கங்கள் | 66 |
| 15 | மாகாண சபைகளின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் விசேட செலவின அலகுகள் | 273 |
| 16 | மாகாண சபை சட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட நிறுவனங்கள் | 70 |
| | மொத்தம் | **2353** |

**09**. கணக்காய்வுக்குட்படுத்தப்படும் நிறுவனங்களின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்த பின்னர் இடர் பகுதிகளை இனங்கண்டு, அவ்வாறான இடர் பகுதிகளில் கவனம் செலுத்தி நிறுவனங்களின் செயலாற்றலில் அதிக கவனம் செலுத்தி கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பொது வளங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் தொடர்பாடல் ஊடகங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதித்துவம் ஊடாக வெளிவரும் விடயங்கள் தொடர்பில் விசேட விசாரணைகளை மேற்கொண்டு நல்லாளுகையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டபிள்யூ.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி